நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.80/2026

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஆனந்த் |
| தந்தை / கணவர் பெயர் | : | கண்ணையன் |
| கிராமம் | : | இந்திரா நகர், மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 39 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.45 PM

1. நான் தற்போது மேட்டுரில் குடியிருக்கிறேன். நான் தனியார் பாதுகாப்பு நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எனக்கும் எதிரிக்கும் வீட்டு வாடகை கொடுப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 4 மாதத்திற்கு முன்பு வாடகைப்பற்றி பேசிக்கொண்டிருந்தோம். அப்போது கூட்டத்தில் இருந்த யாரோ இருவர் என்னை கீழே தள்ளி அடித்துவிட்டார். கூட்டத்தில் எதிரிகளும்

இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரியின் மீது புகார் கொடுத்துவிட்டேன். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் தெரியாது. **(புகாரிலுள்ள கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. ஆஜர் எதிரி சசி என்னுடைய முன்னாள் வீட்டின் உரிமையாளர் என்றால் சரிதான். அவருக்கு வீட்டு வாடகை கொடுப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் தற்போது இல்லை. அவருக்கு வீட்டு வாடகை ரூ.3000/– தரவேண்டும் என்றால் இல்லை. அதுசம்மந்தமாக 10.11.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் எதிரி சசி என் அப்பாவின் கழுத்தை பிடித்து கீழே தள்ளி கெட்டவார்த்தையால் திட்டினார் என்றால் இல்லை.
2. சண்டையை விலக்கிவிட சென்ற என்னை எதிரி சசி அவரது கையில் வைத்திருந்த ரீப்பர் கட்டையால் எனது வலதுக்கை, மூக்கின் மேல் அடித்தார் என்றும் நான் அப்பாவுடன் வெளியே வரும்போது எதிரி சித்ரா சசி வைத்திருந்த ரீப்பர் கட்டையை வாங்கி போலீசார் விசாரணையிலும் என்னுடைய புகார் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
3. நானும் எதிரிகளும் சமரசமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். தற்போது எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.55 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42—ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.80/2026

## P.W.2 —ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கண்ணையன் |
| தந்தை / கணவர் பெயர் | : | அரன் |
| கிராமம் | : | இந்திரா நகர், மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 72 |

*1969—ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969—ஆம் வருடத்திய 44—வது மத்திய சட்டம் )—ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026—ஆம் வருடம், மார்ச் மாதம், 10—ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:—01.56 PM

1. நான் தற்போது மேட்டுரில் குடியிருக்கிறேன். நான் வங்கியில் பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். அ.சா.1க்கும் எதிரிக்கும் வீட்டு வாடகை கொடுப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 4 மாதத்திற்கு முன்பு வாடகைப்பற்றி பேசிக்கொண்டிருந்தோம். அப்போது கூட்டத்தில் இருந்த யாரோ

இருவர் என்னையும் என் மகன் அ.சா.1 ஐயும் கீழே தள்ளி அடித்துவிட்டார். கூட்டத்தில் எதிரிகளும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரியின் மீது அ.சா.1 புகார் கொடுத்துவிட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. ஆஜர் எதிரி சசி அ.சா.1 ன் முன்னாள் வீட்டின் உரிமையாளர் என்றால் சரிதான். அவருக்கு வீட்டு வாடகை கொடுப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் தற்போது இல்லை. அவருக்கு வீட்டு வாடகை ரூ.3000/– தரவேண்டும் என்றால் இல்லை. அதுசம்மந்தமாக 10.11.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் எதிரி சசி என்னை கழுத்தை பிடித்து கீழே தள்ளி கெட்டவார்த்தையால் திட்டினார் என்றால் இல்லை.
2. சண்டையை விலக்கிவிட சென்ற அ.சா.1 ஐ எதிரி சசி அவரது கையில் வைத்திருந்த ரீப்பர் கட்டையால் எனது வலதுக்கை, மூக்கின் மேல் அடித்தார் என்றும் நான் அ.சா.1 உடன் வெளியே வரும்போது எதிரி சித்ரா சசி வைத்திருந்த ரீப்பர் கட்டையை வாங்கி போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
3. நானும் எதிரிகளும் சமரசமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். தற்போது எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 02.00 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**